

பாத்திமா-நூறு
1917-2017

†
JMJ

VERITAS



இன்றைய திருநாள்

பிப்ரவரி 02ம் தேதி

மகா பரிசுத்த கன்னிமாமரியின் சுத்திகரத் திருநாள்

இன்று, திவ்ய குழந்தை சேசுநாதர் சுவாமி பிறந்த 40ம் நாளன்று, மோயீசனுடைய வேத பிரமாணத்தை நிறைவேற்றும்படியாக, மகா பரிசுத்த தேவமாதா, சுத்திரகரச் சடங்கிற்காக ஜெருசலேம் தேவால யத்திற்குச் சென்றதை, திருச்சபை நினைவு கூர்கின்றது.

நம் திவ்ய இரட்சகரான சேசுநாதர் சுவாமி, திவ்ய இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனால் கர்ப்பமாய் உற்பவித்து, மகா பரிசுத்த கன்னிமா மரியாயிடமிருந்து பிறந்தார். மகா பரிசுத்த தேவமாதா, எப்போதும் மாசற்ற திவ்ய கன்னிகையாகவே திகழ்கிறார்கள் என்பது விசுவாச சத்தியம். ஆதலால், முதல் ஆண்குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கான சுத்திகரச் சடங்கை, ஜெருசலேம் தேவாலயத்தில் நிறைவேற்றவேண்டுமென்கிற மோயீசனின் வேதப் பிரமாணத்தின் சட்டத்தை அனுசரிப்பதிலிருந்து, ஜென்மப்பாவமில்லாமல் பிறந்தவர்களும்,மாசற்றவர்களுமான மகா பரிசுத்த தேவமாதா முழு விதிவிலக்கைப்பெற்றிருந்தார்கள். இருப்பினும்,சர்வேசுரன் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியும், அவருடைய வேதபிரமாணத்தின் சட்டங்கள் ஒவ்வொன்றையும் பிரமாணிக்கத்துடன் அனுசரிப்பதன் மூலமாக, சர்வேசுரனை மகிமைப்படுத்துவதின் பேரிலான அளவில்லாத ஆர்வத்தினாலும், உந்தப்பட்டவர்களாகவே, மகா பரிசுத்த தேவமாதா, இந்த சுத்திகரச்

சடங்கை நிறைவேற்றுவதற்காக ஜெருசலேம் தேவாலயத்திற்குச் சென்றார்கள்.

சுத்திகரச் சடங்கிற்காக, பல மைல்கள் தேவ மாதா ஜெருசலேம் தேவாலயத்திற்கு, உலக இரட்சகரை தமது திவ்ய கரங்களில் ஏந்திய படி, நடந்து சென்றார்கள். தேவாலயத்தின் கதவினருகில், குருவின் வருகைக்காகக் காத்திருந்தார்கள்; நன்றியறிதலாகவும், பாவப்பரிகாரமாகவும் காணிக்கைகளை சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தபிறகு, தேவமாதா, ஆழ்ந்த தாழ்ச்சியுடனும்,ஆராதனையுடனும், நன்றியறிதலுடனும்,தமது திவ்ய குமாரனை, குருவின் கரங்களின் மூலமாக, நித்திய பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். மறுபடியும் தமது திவ்ய குமாரனை, மனிதனை இரட்சிக்கும்படியான அலுவலை முழுமையாக நிறைவேற்றும்படியாக, நித்திய பிதாவாகிய சர்வேசுரன் அழைக்கிற வரை, தமது விசேஷ கண்காணிப்பினுள் வளர்க்க வேண்டிய பரிசுத்த அலுவலினிமித்தமாக, வேத பிரமாணத்தின்படி, ஐந்து ஷெக்கல் பணத்தைக் கொடுத்து, மறுபடியும், குருவிடமிருந்து, தேவமாதா வாங்கிக் கொண்டார்கள்.

சுத்திகரச் சடங்கு நிறைவேறியபிறகு,சிமியான் தீர்க்கதரிசி, திவ்ய குழந்தையை கரங்களில் ஏந்தியவாறு, சர்வேசுரனைத் தோத்தரித்து வச னித்ததாவது: “ஆண்டவரே உமது வாக்கியத்தின்படியே, உம்முடைய தாசனை இப்போது,சமாதானத்தோடு போவிடுவீர்! ஏனெனில், தேவரீர், சகல ஜனங்களுக்கும் முன்பாக ஏற்படுத்தின உம்முடைய இரட்சிப்பை என் கண்கள் கண்டுகொண்டன! அது, புறஜாதிகளைப் பிரகாசிப்பிக்கிற ஒளியாகவும், உமது ஜனமாகிய இஸ்ராயேலருக்கு மகிமையாகவும் இருக்கிறது!” என்றார். மேலும், அவர், மகா பரிசுத்த தேவமாதாவை நோக்கி, “இதோ! இவர், இஸ்ராயேலில் அநேகருக்குக் கேடாகவும், உத்தானமாகவும், விரோதிக்கப்படும் குறியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். உம்முடைய ஆத்துமத்தையும் ஓர் வாள் ஊடுருவும்! இதனால், அநேகருடைய இருதய சிந்தனைகள்,

வெளிப்படும்படியாகும்!" என்றார். மேலும், அன்னாள் என்ற வயது முதிர்ந்த தீர்க்கதரிசினி, வந்து , ஆண்டவரை ஸ்துதித்து,இஸ்ராயேலின் இரட்சிப்புக்காகக் காத்துக் கொண்டிருந்த யாவரோடும், மகா பரிசுத்த தேவபாலனைப் பற்றிப் பேசினார்கள். இந்த திருநாள், 4ம் நூற்றாண்டின் முதல் பாதியிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

யோசனை: நாம் மாபெரும் முயற்சிசெய்து, மகா பரிசுத்த தேவமாதாவின் ஆழ்ந்த தாழ்ச்சியைப் பற்றி தியானிப்போமாக! அந்த தாழ்ச்சி தான், நீடித்திருக்கும் நிலைமையான சமாதானத்திற்கு நம்மை இட்டுச் செல்லும் என்பதையும், தாழ்ச்சியுள்ளவர்களுக்கு தமது தேவ வரப்பிரசாதத்தை அருளுகின்ற சர்வேசுரனுடன் நம்மை நெருக்கமாகக் கொண்டு செல்கிறது என்பதையும், எப்போதும் கருத்தில் கொண்டிருப்போமாக!

அர்ச். அமலோற்பவ மாமரியே! வாழ்க!